ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

ஸௌமிய பங்குனி

APRIL 1970



தொகுதி 32 பகுதி 4

Vol. 32 No. 4

ஆசிரியர்:
வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S. ராம சர்மா,

பிரசுரகர்த்தா:
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

சாம்பல் படிந்த நெருப்பு 85

ஆமவாதமும் அதன் சிகித்சையும் சில அனுபவ முறைகள் 88

சித்த ஆயுர்வேத யூனானி முறை மருந்துகளில் விலங்கினத்தினின்று பெறப்படுஞ் சரக்குகன் 93

வருஷச் சந்தா ரூ. 5/-

Annual Subscription Rs. 5/-

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

# வைத்யரத்னம் P. S. வாரியருடைய

# ஆர்ய வைத்தியசாலா

## கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன்: கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - மேனேஜிங் டிரஸ்டி - மானேஜர் தொடர்புடன் போன் நெ 31

| | |
|---|---|
| நர்ஸிங்ஹோம் | போன் நெ. 44 |
| தலைமை வைத்யர் | போன் நெ 25 |
| மானேஜிங் டிரஸ்டி | (வீடு) போன் நெ 27 |
| மானேஜர் | (வீடு) போன் நெ. 26 |

**சென்னை கிளை:**

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

**மற்ற கிளைகள்:**

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

**மானேஜிங் டிரஸ்டி.**
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்.,

[ஸ்தாபிதம் 1939.]

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் :
28, A. தென்னூர் ரோடு,
திருச்சிராப்பள்ளி-1.
Phone No. 3660

விற்பனை டிப்போ :
31, சின்னக் கடைத்தெரு
திருச்சிராப்பள்ளி-2
Phone No. 4202

வைத்தியர்களுக்குத் தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன.

வைத்தியர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.

## எமது விசேஷ புத்தக வெளியீடு-1.

எமது ஸ்தாபனத்தில் தயாராகும் மருந்துகளின் செய்முறையை விளக்கும்

## ஔஷத யோக ஸங்கிரஹம்

### முதல் பாகம்

பிரதி விலை ரு. 6-00. தபால் செலவு தனி.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்

T. S. ஈச்வரன், L.I.M. மானேஜிங்டைரக்டர்.

GRAM : KALIA

Phone: Off. 3232, Res. 4343

# KALIA BROTHERS (Regd.)

INDIAN DRUGS MERCHANTS

JULLUNDUR CITY. (INDIA)

| Price List | | Rs. ps. |
|---|---|---|
| Pure Musk per gram | | 50-00 |
| Pure Saffron | | 2-00 |
| Pure Gorochanam per gram | | 9-00 |
| Pure Pearls Spl. | ,, | 10-00 |
| ,, No. 2 | ,, | 7-00 |
| ,, No. 3 | ,, | 4-00 |
| Pure Ambar No. 1 | ,, | 3-50 |
| ,, No. 2 | ,, | 2-50 |
| ,, No. 3 | ,, | 2-00 |
| Pure Silver Leaves | ,, | 0-80 |

## PACHAKARPURAM

| | | |
|---|---|---|
| Spl. Bhimseni | per gram | 0-30 |
| Singapuri (Yellow) | ,, | 0-25 |
| German or Japan | ,, | 0-20 |
| Powder Pachakarpuram | | 0-06 |
| Pure Menthol | ,, | 0-45 |
| Pure Thymol | ,, | 0-20 |
| Ashtavargam | per Kilo | 7-50 |
| Jiwak Rishwak | ,, | 2-50 |
| Meda Mahameda | ,, | 8-00 |
| Kakoli Kshir Kakoli | ,, | 8-00 |
| Ridhi Vridhi | | 12-00 |
| Silajit (Kalmodam) | | |
| Suryatapi Silajit No. 1 | ,, | 100-00 |
| No. 2 | ,, | 85-00 |

## CRUDE DRUGS

| | | |
|---|---|---|
| Attis Bitter | ,, | 100-00 |
| Beedana | ,, | 20-00 |
| Guggulu Shudh | ,, | 12-00 |
| Gowela | ,, | 60-00 |

| Price List | | Rs. Ps. |
|---|---|---|
| Kuth No. 1 | per Kilo | 5-00 |
| Moosli White | ,, | 15-00 |
| Pushkar mool | ,, | 5-00 |
| Rose Flower Dry | ,, | 10-00 |
| Som Lata | ,, | 10-00 |
| Salib Panja | ,, | 85-00 |
| Salib Gatha | ,, | 20-00 |
| Shingraf | ,, | 300-00 |
| Tiger's Fat | ,, | 45-00 |
| Bears Fat | ,, | 40-00 |
| Pure Vanslochan | ,, | 80-00 |

## AYURVEDIC MEDICINE

| | | |
|---|---|---|
| Chander Prabha | per Kilo | 70-00 |
| Chavan prash | ,, | 10-00 |
| Gudoochi Sattoo (Sindi Maw) | ,, | 12-00 |
| Ras Sindur | ,, | 300-00 |
| Shudh parad | ,, | 300-00 |
| Swaran Vang | ,, | 200-00 |
| Yogaraj Guggulu | ,, | 30-00 |
| Kaishore ,, | ,, | 30-00 |
| Maha Yogaraj ,, | ,, | 140-00 |
| Abrak Bhasam | ,, | 200-00 |
| KantLoh Bhasam | ,, | 85-00 |
| Loh Bhasam Special | ,, | 150-00 |
| Shring Bhasam | ,, | 35-00 |
| Sankh Bhasam | ,, | 30-00 |
| Mandur Bhasam | ,, | 35-00 |
| Silajit Bhasam | ,, | 35-00 |
| Silver Bhasam | ,, | 700-00 |
| Swaran Makshik | ,, | 80-00 |
| Sulphur Purified | ,, | 50-00 |
| Tamber Bhasam | ,, | 300-00 |
| Sidh Makar Dhwaj | per gram | 4-20 |
| Makar Dhwaj ordinary | | 0-80 |

**Please ask for detailed Price List 6¼% Commission to the readers of Vaidya Chandrika**

தந்தி: "அம்ருதம்" P. B. No. 1382. போன்: 26006

# ஆர்ய வைத்திய பார்மஸி

**(கோயமுத்தூர்) லிமிடெட்.,**

**தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18**

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.**

**எங்களுடைய கிளைகள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. புது டில்லி : | 23 B, பூஸா ரோடு, | போன் ; | 585687 |
| 2. மதராஸ் 14 : | கௌடியா மடத் தெரு | ,, | 85752 |
| 3. கள்ளிக்கோட்டை : | மொயிதீன் பள்ளி ரோடு | ,, | 2984 |
| 4. திருச்சூர் : | ரௌண்ட் மேற்கு | ,, | 378 |
| 5. எர்ணாகுளம் 6 : | வளிஜ்ஜம்லம் | ,, | 494 |
| 6. பாலக்காடு-1 : | மார்க்கெட் ரோடு | ,, | 195 |
| 7. பொன்னானி : | கடைவீதி | ,, | 41 |
| 8. கண்ணனூர் : | பிள்ளையார் கோயில்ரோடு | ,, | 92 |
| 9. ஆலத்தூர் : | கோர்ட் வீதி | | |
| 10. கோயமுத்தூர் : | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில் | | 33758 |
| 11. கஞ்சிக்கோடு : | மெயின் ரோடு. | | |
| 12. கோயமுத்தூர் | 229, ராஜவீதி, | ,, | 33988 |

**சேல்ஸ் டிப்போ:**

இந்திரா பில்டிங், சப் ஜெயில் ரோடு, கள்ளிக்கோட்டை.

**பாக்டரி:**
கஞ்சிக்கோடு (கேரளா)

**நர்ஸிங் ஹோம்:**
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன்: 22194)

தலைமை ஆபீஸிலும், எல்லா கிளைகளிலும் தரமுள்ள ஆயுர்வேத மருந்துகளும், நிபுணத்துவம் நிறைந்த வைத்திய ஆலோசனையும் கிடைக்கும். பிரதம வைத்தியரின் மூலம் கடிதங்கள் வழியாகவும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படும்.

**மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க:**

ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

OSR.

# வாரியர்

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப் படுத்தும் :

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினால் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00; 12 ML. ரூ 3–75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

**அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,**

சைனுபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது.]

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

**BHALLA BROTHERS (Regd.)**

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

உயர்ந்த கஸ்தூரி, குங்குமப்பூ,
பச்சைகர்ப்பூரம் முதலியவைகளுக்கு
மிகவும் சிறந்த இடம்.

Wholesale Dealers in:

Musk Saffron and Ayurvedic Drugs etc.

CORRESPOND IN HINDI OR ENGLISH

**Shri Markanday Musk Depot**

(Regd.)

Importers and Exporters

Civil Lines, LUDHIANA, PUNJAB.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

# BHANOT BROTHERS

(REGD.)

**Wholesale Musk, Saffron and Indian Drugs Merchants,**

## LUDHIANA - PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்



மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

# K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.




# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 32 | ஸௌமிய பங்குனி | பகுதி 4 |
| Vol. 32 | 1970 ஏப்ரல் | No. 4 |


நமச் சிவகுமாராய.

॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुवर्यकलानिधिः ।
यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

## "சாம்பல் படிந்த நெருப்பு"

ஒருவன் நெருப்பு வேண்டுமென்றால் புகை இருந்தால் அங்கு நெருப்பு இருக்கும் என்று முடிவு செய்வான். ஆனால் புகை யில்லாமலும் நெருப்பு இருக்கலாம் அல்லவா? புகையிருந்தால் நெருப்பு இருப்பது நிச்சயம் என்பதைக் கொள்ளவேண்டுமே தவிர புகையில்லாவிடில் நெருப்பு கிடையாது என்று கொள்ள முடியாது. அதுபோல் தற்பொழுது நமது இந்திய வைத்யம் சாம்பலுக்குள் அடங்கிய நெருப்புபோல் இருந்து வருகிறது. இதை நன்ருகக் கிளறிவிட்டு பற்ற வைத்தால் புகைய ஆரம்பித்து எரியும். நெருப்பாகத் தோன்றி வியாதிகளைப் பூரணமாக எரிக்கத் தகுதியுள்ளதாக ஆகும். அதற்காக விசேஷ ஆராய்ச்சிகள் தேவை. அரசாங்கத்தின் அனுதரவாலும் சிரத்தைக் குறைவாலும் அந்நியரின் ஆக்ரமிப்பாலும் தற்சமயம் சாம்பல்படிந்த நெருப்பு போல் ஆன நமது இந்திய வைத்யம் நெருப்புபோல் வியாதிகளை எரிக்க சக்தி வாய்ந்தது என்று கூறுவது மிகையாகாது.

அரசாங்கத்தில் உபயோகமற்ற துறைகளிலும் வழிதெரியாத போக்கிலும் பல கோடிரூபாய்கள் வீணுகி வருகின்றன. இந்திய வைத்யத்திற்காக கணிசமான அளவில் சிலவு செய்தால்

வீணுகாது என்பது யோஜனைக்கு எட்டிய விஷயமே. இந்திய வைத்ய ஆராய்ச்சிக் கௌன்ஸில் ஒன்று தற்சமயம் நிறுவப் பட்டுள்ளது. அது அதன் வேலைகளை நடத்தும் சரியான அறி குறிகள் காணப்படுகின்றன தமிழ் நாட்டில் ஓர் மூலிகை ஆராய்ச்சி கேந்திரம் நிறுவுவதற்கு ஏற்பாடு ஆகும்போல் உள்ளது.

நாம் பலகாலமாக தமிழ் நாட்டில் காவிரி, அமராவதி நதி களில் படுகைகளில் மற்றும் கொல்லிமலை மேற்குத்தொடர்ச்சி மலைகளிலும் ஆபூர்வமான பல மூலிகைகள் கிடைக்கின்றன என்று கூறியுள்ளோம். இவைகளைக் கவனமாகத் தேடிப்பிடித்து ஜனங் களின் உபயோகத்திற்கு ஆகுமாறு செய்வது அரசாங்கத்தின் முயற்சியினுலேயே சாத்யமாகும். முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவதுபோன்று தனிப்பட்ட வைத்யர்களோ ஸ்தாபனங் களோ எவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருந்தபோதிலும் இதில் ஈடுபடுவதால் அதிகப்பயன் அடைய முடியாது: மூலிகை ஆராய்ச்சி பாளையங்கோட்டை இந்திய வைத்யக்கல்லூரியின் ஒருபாகமாக இருக்குமெனத் தெரிகின்றது. நல்ல திறமையுள்ள பழங்கால வைத்யர்களையும் நாட்டுப்புரத்தில் மூலிகைகளில் அறிவுபெற்ற ஜனங்களையும் தாவர சாஸ்திர விற்பன்னர்களையும் வைத்துக் கொண்டு ஒவ்வொரு இடங்களிலும் சென்று அவ்விடத்திலுள்ள விசேஷ மூலிகைகளையும் அவைகளின் பெயரையும் புரிந்துகொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். பல மூலிகைகளின் பெயர் தெரியாமல் உபயோகத்திலும் இல்லாமல் இருந்து வருகிறது. உதாரணமாக ரயில்வே ரோடுகளின் ஓரங்களிலும் பல இடங்களிலும் மிளகாய்ச் செடிபோல் ஒரு மூலிகை காணப்படுகிறது. அது ரணசிகித்ஸையில் நன்கு உபயோகப்படுகிறது. இம்மாதிரி மேலும் உள்ளவைகளைக் கண்டுபிடித்து பயன்படச் செய்யவேண்டும். கடவுள்படைப்பில் பயன் இல்லாதபொருள் ஒன்றும் கிடையா என்பது திண்ணம்.

வேடிக்கையாக ஒரு கதை கூறுவது உண்டு. ஒருவன் ஒரு பூதத்தை உபாஸித்து தன் வசமாக்கிக் கொண்டான். அந்த பூதம் தனக்கு எப்பொழுதும் வேலை தரவேண்டும், இல்லாவிடில் அவனையே கொன்றுவிடுவேனென்று கூறியது. அவன் புத்திசாலி. தனக்கு வேண்டிய பல வேலைகளைச் சாதித்துக் கொண்ட பிறகு இனி தனக்கு அந்த பூதத்தினுல் ஒரு காரியமும் இல்லை என்பதனைக்கண்டு கொண்டு இந்நிலையில் அந்த பூதத்தை எந்த வேலையில் ஏவுவது என்று யோசித்தான். இல்லாவிடில் தன்னையே கொன்றுவிடுமல்லவா! ஆகவே தான் வளர்த்து வந்த நாயின் வாலை நேராக நிமிர்த்தும்படி அந்த பூதத்தினிடம் வேண்டிக் கொண்டான். நாய் வாலின் வளைவை நிமிர்த்த அப்படியே

பிடித்துக்கொண்டு இருந்தால்தானே முடியும். பூதம் பலகாலம் பிடித்துக் கொண்டு இருந்தும் வளைவை நிமிர்த்த முடியாமல் போய் விட்டது. ஆகவே அந்த ஒருநாய் வாலும்கூட ஒருவன் உயிரைக் காப்பாற்ற உபயோகப்பட்டதல்லவா ? இந்த மாதிரி பல இடங்களில் பல சந்தர்ப்பங்களில் எல்லாப்பொருள்களும் உபயோக மானவை என்பதை மனதில் வைத்துக் கொண்டு எல்லா இடங்களிலும் விசேஷமான மூலிகைகளைக் கண்டுபிடித்து ஆராய்ச்சி செய்வதில் மிகப்பயன் ஏற்படக்கூடும் என்பதில் சந்தேகமே கிடையாது

எல்லா ஜில்லாத்தலைமை ஆஸ்பத்திரிகளிலும் சித்தவைத்யப் பிரிவுகளை ஏற்படுத்துவதாக கனம் மந்திரி கூறியுள்ளதையும் நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

———

# தமிழ்நாட்டிலுள்ள மூலிகைகள் பற்றி சர்வே

## மத்திய கவுன்ஸில் யோசனை பரிசீலனை

சென்னை, மார்ச், 24–ஹோமியோபதி, இந்திய வைத்திய ஆராய்ச்சி மத்திய கவுன்ஸிலிடமிருந்து தமிழ் நாட்டிலுள்ள மூலிகைகளைப் பற்றி விவரங்கள் சேகரிக்கக் கோரி வந்த யோசனை சென்னை சர்க்காரின் பரிசீலனையின்கீழ் இருந்து வருகிறது என்று தமிழ்நாடு அசெம்பிளியில் இன்று திரு. சித்தன் கேள்விக்குப் பதிலளிக்கையில் கல்வி மந்திரி திரு. இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

ஆராய்ச்சி கேந்திரம் அமைக்க ஒரு ஏக்கர் நிலம் ஒதுக்குமாறும் கவுன்ஸில் கேட்டுக் கொண்டுள்ளது. பாளையங்கோட்டை இந்திய மருந்துக் கல்லூரியின் ஒரு பகுதியாக இந்த கேந்திரம் விளங்கும்.

இந்திய முறை வைத்தியர்கள் தொழில் நடத்துவதை ஒழுங்குபடுத்துவதற்கான தனி மசோதா ஒன்று கொண்டுவரப் படும். எல்லா ஜில்லா தலைமை ஆஸ்பத்திரிகளிலும் சித்த வைத்திய பிரிவுகளைத் திறக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கிறது என்றார்.

# ஆமவாதமும் அதன் சிகிச்சையும் சில அனுபவ முறைகள்

Dr. வி நாராயணசாமி, H.P.I.M.

சென்ற இதழில் ஆமவாதத்தில், 'ஆமம்' என்றும் விஷயத்தைப் பற்றி விவரித்தோம். இப்பொழுது ஆமவாதம் என்றால் என்ன? அதை தீர்க்கும் உபாயங்கள் யாவை? என்பதைப் பற்றி ஆராய்வோம்.

ஆமவாதம் என்கிறநோய் (Rheumatoid arthritis, rheumatic arthritis) உலகத்தில் பரவலாக இருக்கும் நோய்களில் ஒன்று. இந்நோய், மற்ற நோய்களைப் போன்று உயிருக்கு ஆபத்தை அளிக்காமல் போனாலும், மனிதனுடைய வாழ்நாட்களில் பல நாட்களை உபயோகமற்றதாகவும் சகிக்க முடியாத பாதையுடன் கூடியதாகவும் ஆக்குகிறது. ஆதிநாட்கள் தொட்டு இது வரையிலும் இதை அறவே போக்கத் தகுந்த மருந்துகள் கண்டு பிடிக்கப்பட வில்லை. அதனால் உலகத்தின் பலபாகங்களில், இந் நோயைப்பற்றி ஆராய்வதற்கு, பல வைத்திய சங்கங்கள் ஏற்பாடாகி, இடைவிடாமல் ஆராய்ச்சியும் நடைபெறுகிறது. நோய்வாய்ப்பட்ட ஒரு குடும்பத் தலைவனோ தலைவியோ, ஒரு வருஷத்தில் பல நாட்கள் தமது வேலையைச் சரிவர செய்ய முடியாமல் போவதால், அக்குடும்பத்திற்கு வருவாய் குறைவதாலும் இதர சௌகர்யங்கள் குறைவதாலும் இந்நோயை மேலை நாடுகளில் சமுதாய – வருவாயைப் பற்றிய நோய் (Socio economic disease) என்று குறிப்பிடுகிறார்கள். பலதரப்பட்ட காரணங்களால் வருவதாலும், எல்லா வயதிலும் எல்லா காலங்களிலும், எல்லா சூழ்நிலையிலும் வருவதாலும், ஒரு குறிப்பிட்ட மருந்தோ சிகிச்சையோ இந்நோயைப் போக்குவதில்லை. ஒரு தரம் வந்து போனாலும் திரும்பவும், திரும்பவும் வரக் கூடிய நோயானதால் நோயாளியையும். வைத்தியனையும் சோதனைக்கு உள்ளாக்குகிறது.

இந்நோயைப்பற்றிய விரிவான விவரம் சரக, ஸுச்ருத வாக்பட கிரந்தங்களில் நமக்கு கிடைக்கவில்லை. ஏழாவது நூற்றாண்டில் எழுதிய மாதவ நிதானத்தில்தான் இது முதல் தடவையாக விவரிக்கப்பட்டிருக்கிறது. இதை அடுத்து சக்ரதத்த சம்ஹிதையிலும் அதற்குப்பிறகு வந்த நூல்களிலும் இந்நோ

யைப்பற்றி விவரித்திருக்கிறார்கள். இதனால் இந்தநோய் ஆதி காலத்தில் இல்லையோ என்ற சம்சயம் ஏற்படுகிறது. இந்நோயில் ஆமமும் வாதமும் சேர்ந்து நோயை உண்டாக்குவதால், இதற்கு ஆமவாதமென்று பெயர் வந்தது. ஜடராக்கிநியின் அல்ப பலத்தால், ஆகாரம் சரியாக ஜீரணமடையாமல். ஆகாரத்திலிருந்து உண்டாகும் முதல் தாதுவான ரசம் கெட்டு, அது ஆமாசயத்திலிருந்து வெளிக்கிளம்பி, வாத தோஷத்தைக் கெடுத்து, கபதோஷத்தின் இருப்பிடங்களில் ஒன்றாகிய சந்தி மூட்டுகளில் தங்கி வீக்கத்தையும், வலியையும் உண்டாக்குகிறது. இந்த துஷ்ட ஆமமும் வாதமும் பரவும் போது, இவைகளுடைய கனத்தினால் சுரோதஸ்சுகள் அடைபடுகின்றன. அதனால் சோர்வும் ஹிருதயத்திலும் அதைச்சேர்ந்த இடங்களிலும் கனமாக இருப்பதாகவும் தோன்றி (ஹிருதய கௌரவம்) தோஷங்கள் பரவப்பரவ அந்தந்த இடங்களில் வீக்கமும், வலியும் உண்டாக்குகின்றன. ஒரே சமயத்தில் பல மூட்டுகள் பாதிக்கப் படுவதால் கை கால்களை நகர்த்த முடியாமலும், வேலை செய்ய முடியாமலும் ஆக்குகிறது.

கரோதி ஸருஜம் சோதம் யத்ரதோஷ : ப்ரபத்யதே
ஸ தேசோ ருஜதேத்யர்த்தம்

— மாதவநிதானம்

இந்நோயில் கீழ்க்கண்ட லக்ஷணங்கள் காணப்படும். சோர்வு, ஹிருதயத்தில் பாரம், கை கால்கள் மடக்க முடியாமல் போதல், இடுப்பிலும் மற்ற முட்டுகளிலும் வலி, பசி இன்மையும் ஜ்வரமும் எல்லா மூட்டுகளிலும் வீக்கமும் அதிகவலியையும் உண்டாக்கும். இவ் வீக்கமும் வலியும் காரணமில்லாமலே ஒரு மூட்டிலிருந்து மற்ற மூட்டுக்கு மாறும். அடிக்கடி மூத்திரம்போதல் தூக்கமின்மை, நீர்வேட்கை மயக்கம் முதலியன உண்டாகும். அதிக பாதைப் படுத்துவதாலும் அடிக்கடி வரக்கூடுமாதலாலும் இந்த வியாதியை கஷ்டமான வியாதி என்று சொல்லப்படுகிறது.

ஸ கஷ்டஸ் ஸர்வரோகாணும் யத்ரப்ரகுபிதோபவேத்

— மாதவநிதானம்

ஸர்வரோகாணும் மத்யே கஷ்டதம : க்ருச்ரஸாத்ய :

— மதுகோசம்

இந்நோயை சந்திகதவாதம் என்கிற நோயிலிருந்தும் வாதரக்தம் என்றும் நோயிலிருந்தும், பிரித்து வியாதி நிச்சயம் செய்ய வேண்டும் சந்தி கதவாதத்தில், ஜ்வரம் இருப்பதில்லை : ஆமவாதத்தில் போன்று பசி இன்மை இருப்பதில்லை. இவ்வியாதியில்

வீக்கமும் வலியும் மூட்டுக்குப் மூட்டு மாறுவதில்லை. மூட்டு காற்றினால் நிரப்பப்பட்ட மாதிரி ஆகிறது

வாத பூரணத்ருதிஸ்பர்ச : சோத : ஸந்திகதேக நிலே
ப்ரஸாரணு குஞ்சநயோ ரப்ராப்திச்ச ஸவேதநா

கை கால்களை நீட்டவோ மடக்கவோ முடியாமல் போகிறது. இந்நோயில் ஆமத்தைப் பற்றி எதுவும் சொல்லவில்லை.

வாதரக்தம் என்கிற நோய் மூட்டுகளைப் பற்றியது சரக வாக்படர்களால் விவரிக்கப்பட்டு இருக்கிறது. இந்நோயிலும் கணுக்கால், முழங்கால், இடுப்பு முதலிய மூட்டுகளில் வலியும் வீக்கமும் இருந்தாலும், இதில் ஆமத்திற்குப்பதிலாக ரக்தம் கோபத்தை அடைந்து, இதர காரணங்களால் கோபமடைந்த வாத தோஷத்தோடு சேர்ந்து சந்திகளை அடைந்து வீக்கத்தையும் வலியையும் உண்டாக்குகின்றன. இந்நோயில் ரக்தம் விதக்தமாவதால் சந்திகளின்மேல் நிறம் மாறுபடுகிறது சிகப்பாகவோ, கருப்பாகவோ ஆகக்கூடும் விரலினுல் கூடத் தொடமுடியாத வலியோ அல்லது தொட்டால் தெரியாமலேயோ ஆகக்கூடும். மேலும் இதில் முக்கியமாக காலின் சிறிய மூட்டுகளோ கையின் சிறிய மூட்டுகளோ பாதிக்கப் படுகின்றன.

ஆமவாதத்தில் வரக்கூடிய உபத்திரவங்கள் பலவாக இருந்தாலும் சிகிச்சைக்கு வசப்படாமல் போனுல் பூட்டுகள் கெட்டியாகி நீட்ட மடக்க முடியாமல் போவதோடு சந்திகளிலிருக்கிற கபம் வரண்டுபோய் அவ்விடத்திலிருக்கிற தசைநார்களும், ஜவ்வுகளும் தருணுஸ்திகளும் (Tendons, mucous membranes and cartilages) கடினமாகிவிடுகின்றன.

இதனுடைய சிகித்சையைப் பற்றி கவனிப்போம். இதை மூன்று விதமாகப் பிரிக்கவேண்டும். (1) ஹேது பிரத்யநீகம் என்று சொல்லும் வியாதியின் காரணங்களுக்கு மாறுபட்ட வைத்தியம். (2) வியாதி பிரத்யநீகம் என்று சொல்லும் வியாதியின் லக்ஷணங்களுக்குத் தகுந்த மாதிரி சிகிச்சிப்பது. (3) ஹேது வியாதி பிரத்யநீகம் என்று சொல்லும் காரணங்கள் வியாதி இவற்றிற்கு விரோதமாக சிகித்ஸை செய்தல் என்பனவாம். ஆகையால் கேவலம் வலியை நீக்க மட்டும் மருந்துகள் கொடுத்தால் போதாது மருந்துகள் தூஷிக்கப்பட்ட தாதுக்களையும், தோஷங்களையும் தம் நிலைமைக்குக் கொண்டுவரத் தக்கதாக இருக்க வேண்டும்.

சுமார் 200 பிணியாளிகளுக்கு (ஆண், பெண்) கொடுத்து பலனடைந்த சில மருந்துகளை இங்கு கவனிப்போம். குக்குலு (Balsa modendron Mukul) புத்தகங்களில் ஐந்து வகையாக சொல்லியிருந்தாலும் சாதாரணமாக உபயோகிப்பது மகிஷாக்ஷி குக்குலு. இது வரண்ட பிரதேசமாகிய கட்ச், குஜராத்தின் சில இடங்கள், மேற்கு ராஜஸ்தான் போன்ற இடங்களில் உற்பத்தியாகும் ஒரு செடியின் கோந்து. இதன் ரசம் கசப்பு உஷ்ணவீர்யம், கடுவிபாகம் சரகுணமுள்ளது. இதை சுத்தி செய்து உபயோகிக்க வேண்டும். இதைத் தனியாகவோ, மற்ற மருந்துகளுடன் சேர்த்தோ கொடுக்கலாம். பல வாத வியாதிகளில் உபயோகமானலும்கூட ஆமவாத்ததில் அதிக பிரயோஜனமுள்ளது. யோகராஜகுக்குலுவும் (சாரங்கதரா) மகாயோகராஜ குக்குலுவும் (பைஷஜ்ய ரத்நாவளி) பிரசித்தமானவை. மூட்டுகள் வரண்டு ஸ்தம்பித்துப் போனல் பஞ்சதிக்த குக்குலு கிருதத்தை (அஷ்டா ஹிருதய வாதசிகித்சை) ஸ்நேகபானமாக கொடுக்கலாம்.

சமீபத்தில் குக்குலுவை ரசாயன முறையில் ஆராய்ந்ததில் இதற்கு கார்டிசோனுக்கு (Cortisone) இருக்கும் குணம் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. குக்குலுவின் முக்கிய குணம் யோகவாஹி. இதனுடன் சேர்க்கப்பட்ட திரவியங்களின் குணங்களையும் கிரகித்துப் பலனளிக்கிறது. எல்லா வயதிலும் எல்லா காலங்களிலும் உபயோகிக்கலாம்.

ஸயோகவாஹீ ஸ ஸர்வர்த்து ஸேவ்ய: ஸுகசீலனீய:

2. (a) லசுனம்: வெள்ளைப்பூண்டு (Allium Sativam) இது எல்லோருக்கும் தெரிந்த திரவியம். ஆகாரத்திலும் மருந்திலும் பயன்படுகிறது. புளிப்பைத் தவிர எல்லா ரசங்களையும் உடையது. காரம் அதிகமானது. கடுவிபாகம் சரகுணம். இதை லசுன க்ஷீரமாகவோ, கிருதமாகவோ, ரசாயன முறையிலோ உபயோகிக்கலாம் இதைக் கவனத்தோடு உபயோகிக்க வேண்டும். பித்த பிரகிருதி பிணியாளுக்கும், பித்த ரக்த தோஷங்களிலும், கிரீஷ்ம சரத் காலங்களிலும் (சித்திரை, வைகாசி – ஐப்பசி, கார்த்திகை) உபயோகிக்கக்கூடாது

சீலயேத் லசுநம் சீதே வஸந்தேபி கபோல்பண:
கநோதயே பி வாதார்த்த: ஸதாவா க்ரீஷ்மசீலயா.

சீத காலங்களிலும், (ஹேமந்த சிசிர) கபம் அதிகரித்திருக்கும் வசந்த காலத்திலும், வாதமதிகரித்திருக்கும் வர்ஷா காலத்திலும், மற்ற காலங்களில் உபயோகிக்க வேண்டுமானல் கிரீஷ்ம காலத்

தில் நடக்க வேண்டிய குளிர்சாதனங்களுடன் உபயோகிக்கலாம். சுத்த வாதரோகத்தில் வெள்ளைப்பூண்டைவிட உயர்வான மருந்து கிடையாது என்கிருர் ஆசார்யர்.

சுத்தே வா வித்யதே[illegible]வாயோ : ந த்ரவ்யம் லசுநாத்பரம்

3 பலா – சித்தாமுட்டி (Seda Cordifolia) எல்லா இடங்களிலும் கிடைக்கக்கூடிய பொருள் மதுரதிக்க ரசங்களை உடையது, சீதவீர்யமும் ஸ்நிக்த குணமுமுள்ளது. இதை அரிஷ்டமாகவும், தைலமாகவும், கிருதமாகவும் உபயோகிக்கலாம். நாள்பட்ட ஆமவாதத்தில் க்ஷீரபலா தைலம் 101 ஆவர்த்தனமானது உள்ளுக்குக் கொடுக்கலாம். பலாரிஷ்டத்தையும் கொடுக்கலாம்,

4. ராஸ்நா – சித்தரத்தை (Vanda Roxburghi) இம்மருந்தை (ராஸ்நா) பல இடங்களில் வெவ்வேறு பொருளாக உபயோகிக்கின்றனர். இது ஒரு சந்திக்த திரவியம். தென்னுட்டில் உபயோகிப்பது தாவர சாஸ்திரத்தில் கூறப்படும் வாண்டாராக்ஸ்பர்கை என்னும் பொருளையே. கசப்பு ரசம், உஷ்ண வீர்யம், ஆமத்தை ஜீர்ணிக்கக் கூடியது. ஆமாசயத்திலிருக்கும் ஆமத்தை மட்டுமல்லாமல் தாதுக்களிலிருக்கும் ஆமத்தையும் போக்கக் கூடியது. முக்கியமாக ரசதாதுவிலிருப்பதை.

உபயோகப்படுத்தப்பட்ட வேறு சில மருந்துகள் :—

1. ராச்நாதி கஷாயம் (ஸஹஸ்ரயோகம்). 2. சகசராதி கஷாயம் (அஷ்டாங்க ஹிருதயம்), 3. வாதகஜாங்குசம், 4. வாத ராக்ஷசம்.

மேல் பூசத்தைலங்கள்: 1. கொட்டம் சுக்காதி (ஸஹஸ்ர யோகம்), 2. சசிசார தைலம் (அனுபூதம்) (ஓமகஷாயத்தில் ஓம கல்கத்துடன் தேங்காய் எண்ணெயை காய்ச்சி கர்பூரத்தை பாத்திரபாகமாக கலத்தல்), 3 தான்வந்தர தைலம், 4. க்ஷீர பலா தைலம்

மல சோதனத்திற்காக: ஹிங்கு திரிகுண தைலம், 2 அவிபத்திகர சூரணம்.

வாதஸ்யோபக்ரம: ஸ்நேஹ: ஸ்வேத: ஸம்சோதனம் ம்ருது

பொதுவாக வாத ரோகங்களில் எண்ணெபூசுவது காப்படம் போடுதல் மலத்தைக் கழித்தல் என்பனவை அடிக்கடி செய்ய வேண்டும்.

———

# சித்த ஆயுர்வேத யூனுனி முறை மருந்துகளில் விலங்கினத்தினின்று பெறப்படுஞ் சரக்குகள்

**Dr. Y. கொண்டல் ராவ், L.I.M.,**
செயலாளர், இண்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேட்டிவ் பார்மசி அண்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், அடையாறு, மதராஸ்-20.

இவ்வுலகில் வாழும் உயிரினங்களுள் மனிதனே எண்ணற்ற பிணிகளுக்கு ஆளாகின்றுன். வரலாற்றுக் கெட்டாத பண்டைக் காலந்தொட்டு, அவன் தனக்குற்ற ஊறுகளினின்றும் பிணிகளினின்றும் பிழைத்தற் பொருட்டுத் தன் சுற்றுப்புரங்களிற் கிடைக்கும் செடிகொடிகள், விலங்கினப் பொருட்கள் மற்றும் கனிப் பொருட்கள், உப்புக்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தத் துவங்கினுன். இவற்றுள் விலங்கினப் பொருட்களை அவன் தெரிந்தெடுத்த முறை மிக விந்தையாகத் தோன்றினும் அதில் பல உண்மைகள் பொதிந்திருக்க காணலாம். மனித உடலில் நோயுற்ற பாகத்திற்கு, மற்ற உயிரினங்களின் அதே பகுதியை எடுத்து மருந்தாக அவன் பயன்படுத்தினுன்.

“ ஸர்வதா ஸர்வ பாவானும்
ஸாமான்யம் வ்ருத்தி காரணம் ”

என்பது சரகர் வாக்கு,

இந்திய மருத்துவ முறைகளில் மிகப்பழைய நூல்களின் வாயிலாக ஒன்றிற்கொன்று இனத்தொடர்பில்லாத பலவேறு விலங்கினப் பொருட்கள் மருந்தாகப் பயன்படுத்தப்பட்டனவென அறிகின்றேம். இன்றுவரை, நூற்றுக்கணக்கான மரவடைப் பொருட்கள் மருந்தாகக்கொள்ளப்படினும், இவ்விலங்கினச் சரக்குகள் தம் பெருமையிற் குன்ருது நிற்பது, அவற்றிற் காணப்படும் தனிச் சிறப்புக்களாலேயாம். மேலும், உருவிற் சிறியவையான பவழங்களும், புழுக்களும், கிளிஞ்சல்களும், நத்தைகளும் தொடங்கி பறவைகள், பாம்புகள், பாலூட்டிகள் வரையான பெரு விலங்குகளும் மருந்துகளில் பயன்படுத்தப் படுவதனின்றும், மனிதனின் மண்டையோடும் மருந்துப் பொருளாகக் கொள்ளப் படுவதினின்றும், இம்முறை எத்துணை சிந்தனையும் ஆய்வாற்றலும்

கொண்டு வகுக்கப்பட்டுள்ளதென்பது தெளிவாகும். நோய் தீர்த்தலையே கடமையாகக்கொண்ட பண்டைய இந்நிய மருத்துவர்கள், மிகக்கொடிய விலங்குகளையும் விட்டுவைக்க வில்லையென்பது, கருநாகத்தின் நஞ்சினை இதய நோய்க்கு மருந்தாகக்கொள்வதைக் காணின் தெற்றென விளங்கும். இவ்வுண்மை மேலை மருத்துவ வல்லுநராலும் ஒப்புக்கொள்ளப் படுகின்றது.

மேலும், சில விலங்குகளின் குறிப்பிட்ட உள்ளுறுப்புக்களில் மிக அரிதாக விளையும் பலவகைப் பொருட்களின் மருந்துக் குணங்களையும் அவர்கள் ஆய்ந்து அறிந்திருந்தார்கள். மிக அரிதிற் கிடைக்கும் முத்தும், கோரோசனமும் மீனம்பரும் சில எடுத்துக்காட்டுக்களாகும். இவ்வாறு பெறப்பட்ட ஒவ்வொரு பொருளும் குறிப்பிட்ட பிணிகளில் இன்னவாறு செய்யப்பட்டு இந்த அளவையிற் கொடுக்கப்படல் வேண்டுமென்பதும் பண்டை நூல்களிற்றெளிவாகக் கூறப்படுகிறது நீருக்கப்பட்ட பவழமும், சிப்பியும், நத்தையும், முத்தும், மானின் கொம்பும் பொதுவாகச் சுண்ணும்புச் சத்துக்களே யாயினும், குறிப்பிட்ட வெவ்வேறு பிணிகளிற் கொடுக்கப்படல் வேண்டுமென்று வரையறுத்துக் கூறப்பட்டிருத்தல் ஈண்டு குறிப்பிடத்தக்கது. இதனின்று, இந்நீறுகளின் மருந்தாற்றலை அவர்கள் தீர ஆராய்ந்து முடிவெடுத்தனரென்பது தெளிவாகும்.

சித்த ஆயுர்வேத யூனனி முறைகள் தனித்தனியாயினும் மருந்துப்பொருள் அறிவியலில் இம்முறைகளின் முடிபுகள் வியத்தகு அளவில் ஒத்த கருத்தினை உடையனவாம், என்னும் உண்மையும் மேற்கூறியவற்ருல் உறுதியாகும்.

இதுகாறும், மருத்துவ அறிவியலில் விலங்கினப் பொருட்கள் எவ்வாறு பயன்படவாரம்பித்துச் சிறப்புற்றனவென்றும், இம் முறைகளை நம் சான்ரோர் வளர்த்த வரலாறும் கூறப்பட்டது. இனி, இப்பொருட்களுள் பெருவாரியாகப் பயன்படுத்தப்படுவன வற்றின் பிறப்பிடம், தோற்றம், தன்மை இவற்றுடன் அவை பயன்படுத்தப்படும் மருந்துகள் இவை பற்றிக் காண் போம்.

இப்பொருட்கள் இங்கு, அவற்றின் தோற்றம் அல்லது பிறப்பிடம் இவற்றின் சார்பில் வரிசைப்படுத்தி விளக்கப் பட்டுள்ளன.

## I. முழுமையாகப் பயன்படுத்தப்படுவன

மண்புழு, நண்டு மற்றும் நத்தை ஆகிய இவ்வகுப்பில் அடங்கும்.

1. மண்புழு: (வடமொழி: பூநாகம், இந்தி: கேச்சுவா, ஆங்கிலம்: எர்த்வர்ம்,); இந்தியாவில் பல இனங்களைச் சேர்ந்த மண்புழுக்கள் காணப்படுகின்றன. அவற்றுட் சில - ஃபெரிட்டைமா திராவிடா, மெகாஸ்கோலெக்ஸ், யூடைல்பியஸ், லாம்பிட்டோ, ஆக்டோகீட்டஸ் என்பன, தென்னாட்டிற் கிடைப்பன பெரும் பாலும் மெகாஸ்கோலெக்ஸ் இனத்தன. மண்புழு, உடல் வெப்பத்தை உயர்த்தும்; வாதநோய்கள், மூட்டுவாதம், நரம்பு பற்றிய பிணிகள் இவற்றைத் தீர்க்கும். பூநாகத் தைலம் (ஆயுர்வேதம்) உடல் வற்றிப்போதல், பக்கவாதம், முகத்தசை களைப் பற்றிய வாதநோய்கள் இவற்றிற் பயன்படும். சீந்திற் சூரணம் (சித்தா), ஈளை, இருமல், எலும்புருக்கி ஆகிய நோய் களுக்கு மருந்தாகும். மண்புழுவில் தாமிரம் உள்ளதென்பது சித்தர் நூல்களிற் பேசப்படுகின்றது.

2. நண்டு: (வடமொழி: கர்க்கட, யூனனி: சர்த்தான், ஆங்கிலம்: க்ராப்) வடநாட்டில், பெரும்பாலும் கங்கையாற்றுப் பகுதிகளைச் சார்ந்த விடங்களிற் கிடைக்கும். நண்டு விலங்கிய லாளரால் சில்லா செர்ரேட்டா என்றும் தென்னாட்டு வயல் சார்ந்த விடங்களிற் கிடைப்பது பாராடெல்ப்யூசா ஹைட்ரோ ட்ரோமஸ் என்றும் கூறப்படும். நண்டிற்குப் பித்தமடக்கி, சிறுநீர்ப்பெருக்கி, மலமிளக்கி, இதயத்தூண்டி ஆகிய தன்மைகள் உண்டு. இது நாட்பட்ட காய்ச்சல், இளைப்பு, ஆஸ்துமா, மற்றும் எலும்புருக்கி நோய்களிற் பயன்படும். அர்க்கேசாத்தான் சஃபூபே சாத்தான் ஆகிய யூனனி மருந்துகள் நுரையீரல்களைத் தாக்கும் காச நோயிற் கொடுக்கப்படும்.

3. நத்தை: (வடமொழி: ஆங்கிலம்: ஆப்பிள் ஸ்நெயில்) இது ஏரி குளங்களிலும் சிறுபான்மை வயல்களிலும் காணப்படும். பசிய முடிதட்டையான சங்கொத்த திருகோடுகொண்ட நத்தை யாகும். விலங்கியலில் இதன் பெயர் பைலாக்ளொபோசா என்ப. முழு நத்தைகள் மட்கலத்துளிட்டுச் சுட்டு நீருக்கப்பட்டு, நத்தை பற்பம் என்ற பெயரில் பல்வகை மூலங்களுக்கும் பயன் படுகின்றன.

## II. மெல்லுடலிகளின் ஓடுகள்

இவ்வகுப்பில் சங்கு, பலகரை, முத்துச்சிப்பி, கிளிஞ்சல், கணவாய் ஓடு, நகம் இவை அடங்கும்.

4. சங்கு: (வடமொழி: சங்க்கம், இந்தி: கான்ச், ஆங்கிலம்: ஷங்க், கான்ச்,): வெண்சங்கின் விலங்கியற் பெயர், டர்பீனெல்லா பைரம் என்பது. இதன் வெளிப்புறம் இயற்கையில் அழுக்கு மூடியிருப்பினும் கழுவித் தூய்மை செய்யப்படின் தூய வெண்ணிறத்தொடு விளங்கும். உட்புறத்துள்ள உயிர்ப்பொருள் நீக்கப்பட்டுக் கழுவி யுலர்த்தப்பட்ட சங்குகளே மருந்திற் கொள்ளப்படும். சங்கின் நீறு, ஆயுர்வேதத்தில் சங்க்க பஸ்ம என்றும் சித்த முறையில் சங்கு பற்பம் என்றும் பெயர்பெறும். இது சூலை, வயிற்று வலிகள், வயிற்றிற் புளிப்பு மிஞ்சுதல் ஆகிய பிணிகளிற் பயன் தரும்.

5. பலகரை: (வடமொழி: வராட்டிகம், இந்தி: கவுரி, ஆங்கிலம்: கவுரி) இதனைத் தமிழிற் சோழி என்றும் சொல்வர். விலங்கியலில் இது சைப்பிரியா மொனீட்டா எனப்படும். இதனின்றும் ஆயுர்வேதியர் வராட்டிக பஸ்மமும் சித்தர் பலகறை பற்பமும், யூனனி வைத்தியர் குஷ்த்தே கௌடியும் செய்வர். இப்பற்பங்கள், வயிற்றுவலி, கல்லீரல் மற்றும் மண்ணீரல் பிணிகள், மூச்சுக் குழலழற்சி, கோழையால் மூச்சடைப்பு ஆகிய நிலைகளிற் பயன்படுத்தப்படுகின்றது.

6. முத்துச்சிப்பி: (வடமொழி: மௌக்த சுக்தி, இந்தி: மோத்தி-கீ-சீப், ஆங்கிலம்: பெர்ல் ஆய்ஸடர்ஷெல்) தென்னாட்டுக் கடற்கரைகளிற் குளித்தெடுக்கப்படும் முத்துச் சிப்பிகள், பிங்க்டாடா மார்கரிட்டிஃபெரா என விலங்கியல் கூறும் இதன் சிப்பிகளைக்கொண்டு, சுக்தி பஸ்மம் (ஆயுர்வேதம்) முத்துச்சிப்பி பற்பம் (சித்தா) இவை செய்யப்பட்டு, சூலம், குன்மம், மகோதரம், இருமல் ஆகிய நோய்களில் கொடுக்கப்படுகின்றது.

7. கிளிஞ்சல்: (ஆங்கிலம்: ஃப்ரெஷ்வாட்டர் மஸ்ஸல்): இது நந்நீரில் வாழும் இணையோட்டு மெல்லுடலியாம். இதனை விலங்கியலார் லாமெல்லிடென்ஸ் மார்ஜினலிஸ் என்றழைப்பர். இக்கிளிஞ்சலின் சிப்பி, கிளிஞ்சல் மெழுகிற் சேரும். இம்மெழுகு உள்ளங்காலோரங்களில் உண்டாகும் வெடிப்புகளுக்கு வெளிப்பூச்சு மருந்தாகும்.

8. கணவாய் ஓடு: (வடமொழி: சமுத்திரபேனம், யூனானி: கட்டேதரியா, ஆங்கிலம்: ஆஸ்செபியா): இது கணவாய் மீனின் உட்புறத்துள்ள தட்டையான நுண்ணறைகள் மிக்க தக்கை போன்ற ஓடு. இதனைக் கடல் நுரை என்றும் கூறுவர் உளர். இது வயிற்றுப் புளிப்பைப் போக்கும், அழற்சியை நீக்கும், உணர்வினைக் குறைக்கும். இது சேர்ந்த இராசுனாதிச் சூரணம் என்னும் ஆயுர்வேத மருந்து நாட்பட்ட தலைவலிக்கும், உறக்கமின்மைக்கும் வெளிப்பூச்சாகப் பயன்படுத்தப்படுகிறது. சலோதரை மணியெனுஞ் சித்த மருந்து சிறுநீரடைப்பிலுங் கல்லடைப்பிலுங் கொடுக்கப்படும். ஹப்பே சோசக் என்னும் யூனானி மருந்து பெரும்பாட்டிற் பயனும்.

9. நகம்: (வடமொழி நகம்): இது ஆயுர் வேதியர் மட்டும் பயன்படுத்தும் பொருளாகும். இது மணப்பொருளாகக் கருதப் பட்டுத் தயிலங்களிற் சேர்க்கப்படுகின்றது. நரகத்தைலம், சந்தனாதித் தைலம் ஆகியவற்றுள்ளும் இதுசேரும். இது ஓர் நத்தையின் வாய்ப்புற மூடியென்பது இதன் உருவமைப்பினின்றும் அறியப்படினும் இது எவ்வித நத்தையென்பது இன்னுந் தீர்வு காணப்படவில்லை நூல்களில், அக்கேட்டினு ஃப்யூலிக்கா என்னும் ஆப்பிரிக்க அரக்க நத்தையின் வாய்ப்புற மூடியென்றும், ஹெலிக்ஸ் அஸ்ப்பிரா என்னும் நத்தையினுடைய தென்றும் பலவ ருகப் பேசப்படினும், யாங்கண்ட அளவில், அக்கேட்டினு ஃப்யூலிக்காவிற்கு இத்தகைய மூடியொன்றும் இல்லையென்பது மட்டிலும் ஐயப்பாடின்றித் தெளிவாக்கப்பட்டது. இப்பொருள் இந்தியாவின வடமேற்குப் புறத்துள்ள வெளிநாடுகளினின்றும் இறக்குமதி செய்யப்படுவதாய்ச் சொல்லப்படுவதுடன், ஒரு இறக்குமதிச் சரக்காகவும் 'இந்திய ஏற்றுமதி இறக்குமதிபற்றிய செந்நூலிற் (Red book)' கூறப்படுகின்றது.

(தொடரும்)

---

## சந்தாதாரர்கட்கு

1970ம் வருடத்திற்கு தங்களுடைய சந்தாவை 30—4—70க்குள் அனுப்பிவைக்க கோருகிறோம்: அவ்விதம் அனுப்பாதவர்களுக்கு மே மாத இதழ் வி பி. தபால் மூலம் அனுப்பிவைக்க நேரிடும்.

A. ராகவ ராவ்,
பொதுக்கார்யதர்சி.

# PURI BROTHERS (REGD.)

**Musk, Saffron and Indian Drugs Merchants**

## JULLUNDUR-1

Tele: "VENKATESH" Phone: **3923**

### PRICE LIST FOR 1970

| | | Rs. P. |
|---|---|---|
| Pure Musk | per gram | 35-00 |
| Pure Saffron | ,, | 1-75 |
| Pure Gorochanam | ,, | 9-00 |
| Pu e Pearls special | ,, | 10-00 |
| Pure Pearls No, 2. | ,, | 8-00 |
| Pure Pearls No. 3. | ,, | 6-00 |
| Pure Amber No. 1 | per gm. | 4-00 |
| Pure Amber No. 2 | ,, | 3-50 |
| Pure Amber No. 3 | ,, | 3-00 |
| Pure Amber Black | ,, | 1-00 |

**PACHAKARPURAM**

| | | |
|---|---|---|
| Spl. Bhimseni | per gram | 0-25 |
| Singapuri (Yellow) | ,, | 0-20 |
| German or Japan | | 0-20 |
| Ashtavargam | per Kilo | 14-00 |
| Jiwak Rishwak | ,, | 2-50 |
| Meda Mahameda | ,, | 8-00 |
| Kakoli Kashir Kakoli | ,, | 14-00 |
| Ridhi Vridhi | ,, | 12-00 |
| Suryatapi Silajit No. 1 | per Kilo | 100-00 |
| Suryatapi Silajit No. 2. | ,, | 85-00 |

**BHASAMS**

| | | |
|---|---|---|
| Rajit Bhasam | per K. G. | 1000-00 |
| Tamber Bhasam | ,, | 220-00 |
| Abhrak (100 times) | ,, | 230-00 |
| Abhrak (60 times) | ,, | 160-00 |
| Bang Bhasam | ,, | 160-00 |
| Akik Bhasam | ,, | 50-00 |
| Shilajit | ,, | 30-00 |
| Annabedi Bhasam | ,, | 30-00 |
| Swaran Makshika | ,, | 60-00 |
| Nag Bhasam | ,, | 120-00 |
| Pearl Bhasam | per ten gram | 100-00 |
| Parda Bhasam | ,, | 10-75 |

| | | Rs. P. |
|---|---|---|
| Hingul Bhasam | per ten gm. | 10-75 |
| Loh Bhasam (special) | per K. G. | 130-00 |
| Loh Bhasam No. 1 | ,, | 75-00 |
| Mandur Bhasam | ,, | 30-00 |
| Sankh Bhasam | ,, | 30-00 |
| Shring Bhasam | ,, | 30-00 |
| Vaikrant Bhasam | ,, | 180-00 |
| Hartal Godanti | ,, | 30-00 |
| Kant Loh Bhasam | ,, | 250-00 |
| Parwal Bhasam | ,, | 175-00 |

**PILLS (GUTTIKA)**

| | | |
|---|---|---|
| Agnitundi Vati | per ten gm. | 1-00 |
| Basant Kushmakar | ,, | 50-00 |
| Chander Odya Ras | ,, | 40-00 |
| Sanjeevani Vati | ,, | 6-00 |
| Eladi Vati | per K. G. | 35-00 |
| Echha Bhedi Ras | ,, | 60-00 |
| Kaf Ketu Ras | ,, | 50-00 |
| Kan Kayan Vati | ,, | 45-00 |
| Khadi Radi Vati | ,, | 45-00 |
| Lavangadi Vati | ,, | 120-00 |
| Mritunjaya Ras | ,, | 125-00 |
| Mandur Vati | ,, | 40-00 |
| Sankh Vati | ,, | 50-00 |
| Shul Gaj Kesar Vati | ,, | 80-00 |
| Nityodit Ras | ,, | 125-00 |
| Chander Prabha Vati | | 60-00 |
| Maha Jograj Guggal | ,, | 110-00 |
| Jograj Guggal | ,, | 35-00 |
| Kishore Guggal | ,, | 33-00 |
| Kanchanar Guggal | ,, | 35-00 |
| Raj Parsadani Vati | 30 pills | 1-00 |
| Mridu Virechan | 1000 ,, | 16-00 |
| Leucorhin | 1000 ,, | 50-00 |
| Kasari Pills | 1000 ,, | 30-00 |

5% Commission will be allowed on all orders received direct by us


# இம்காப்ஸ்

## ஆராய்ச்சியும் நிலையான வளர்ச்சியும்

இம்காப்ஸின் கடந்த 25 ஆண்டுகால வளர்ச்சி நிலையான முன்னேற்றத்தின் அறிகுறி. மருத்துவத்துறையில் இந்த நிறுவனம் 1944-ம் ஆண்டு 224 அங்கத்தினருடன் கூட்டுறவு முறையில் சிறிய அளவில் தொடங்கப்பட்டது. இன்று இம்காப்ஸின் வசதிகள் நிறைந்த ஆராய்ச்சிப் பகுதி நம்நாட்டின் மருத்துவ மூலிகைகளின் பயனைக் குறித்து இடைவருத ஆராய்ச்சி புரிந்து கொண்டு வருகிறது. மேலும் மருந்துகளைத் தயாரிக்கின்ற கூடமானது நவீன யந்திரங்களைப் பெற்றமையால் உற்பத்தியை பன்மடங்கு பெருக்கி, தரமானதும், தூய்மையானதுமான மருந்துகளை விரும்பும் பல லட்சக்கணக்கான மக்களின் தேவைகளை நியாய விலையில் பூர்த்தி செய்கிறது.

தி இந்தியன் மெடிகல்
பிராக்டிஷனர்ஸ்
கோவாப்பரேட்டிவ்
பார்மஸி & ஸ்டோர்ஸ் லிட்.,
IMPCOPS அடையார், சென்னை-20

கிளை அலுவலகங்கள்:
சென்னை-2, மதுரை
தாடேபள்ளி (ஆந்திரப் பிரதேசம்),
விஜயவாடா, ஹைதராபாத், பெங்களூர்




மருந்துகள் சென்னை "காமதேனு"விலும் மற்றும் பிரபலமான மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

VAIDYA CHANDRIKA APRIL 1970 Regd. No. M. 1048

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

# " சக்தி சஞ்ஜீவி "

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எங்கிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஒளஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)

Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma. Published by Dr. T. S Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2 Printed at Githa Press. Tiruchirapalli-2.